MIGRANT WORKERS CENTRE
migrantworkers.org.au

# வேலையின் வகைகள்

/mwcvic
@mwcvic
@mwcvic

54 Victoria St,
Melbourne, VIC 3053
mwc@vthc.org.au
03 9659 3516

## தற்காலிகத் தொழிலாளி

**தற்காலிகத் தொழிலாளி ஒருவருக்கு:**

- குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு வேலை இருக்கும் என்ற உத்தரவாதம் கிடையாது
- பொதுவாக மாறுபட்ட நேரங்களில் வேலை செய்வார்
- நோய் விடுப்பு மற்றும் வருடாந்த விடுப்பு ஆகியவற்றிற்கு இவர் ஊதியம் பெறமாட்டார்
- பதிவு செய்யப்பட்ட உடன்படிக்கை, நிர்ணயிக்கப்பட்ட அல்லது பணியமர்த்தல்ஒப்பந்தம் ஒன்றினால் வேண்டப்பட்டாலொழிய, செய்யும் வேலையை அவர் நிறுத்திக்கொள்ளலாம்.

**தற்காலிகத் தொழிலாளிகளுக்குப் பின்வரும் உரிமைகள் உள்ளன:**

- தனக்குச் சமமான முழு நேர அல்லது பகுதி நேரத் தொழிலாளர்களை விட அதிகமான மணி நேர உதிய வீதம். இது ‘தற்காலிகத் தொழிலாளர் கூடுதல் தொகை’ என்று சொல்லப்படும்.
- ஊதியமில்லாத 2 நாள் பராமரிப்பாளர் விடுப்பு மற்றும் ஒவ்வொரு தருணத்திலும் 2 நாள் கருணை அடிப்படை விடுப்பு
- ஊதியமில்லாத சமூக சேவை விடுப்பு

**12 மாதங்கள் தொடர்ந்து வேலையில் இருந்த பிறகு, வேலை தவறாமல் தொடருமானால், தற்காலிகத் தொழிலாளி ஒருவரால்:**

- வசதிக்கேற்ற வேலை ஏற்பாடுகள் வேண்டுமெனக் கேட்க இயலும்
- பிள்ளைப்பேறு விடுப்பு கேட்க இயலும்

## முழு நேர வேலை

**முழு நேரத் தொழிலாளி ஒருவர்:**

- ஒவ்வொரு வாரமும் சராசரியாக ஏறத்தாழ 38 மணி நேரம் வேலை செய்வார்.
- பொதுவாக ஒவ்வொரு வாரமும் ஒரே நேரங்களில் வேலை செய்வார்
- NES ஆதாயங்களை முற்றிலும் பெறுவார்
- ஒரு குறிப்பிட்ட வேலை அல்லது தொழில்துறையில், தொழிலாளி ஒருவருக்கான வேலை நேரங்கள் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையேயான உடன்பாடு ஒன்றினால் அல்லது நிர்ணயிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றினால் ஏற்படுத்திக்கொள்ளப்படும்.
- ஒவ்வொரு வருடத்திற்கும் நான்கு வார கால வருடாந்த விடுப்பு (நீங்கள் எவ்வளவு காலம் வேலை செய்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து இது அமையும்).
- ஒவ்வொரு வருடத்திற்கும் பத்து நாட்கள் தனிநபர்/ பராமரிப்பாளர் விடுப்பு (நீங்கள் எவ்வளவு காலம் வேலை செய்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து இது அமையும்), அனுமதிக்கத் தக்க இரண்டு தருணங்களில் சம்பளத்தோடு கூடிய இரண்டு நாட்களுக்கான விடுப்பு மற்றும் அனுமதிக்கத் தக்க இரண்டு தருணங்களில் சம்பளத்தோடு கூடிய இரண்டு நாட்கள் பராமரிப்பாளர் விடுப்பு.
- நீண்டகால சேவை விடுப்பு.
- பொது விடுமுறைகள் மற்றும் அந்த நாட்களில் சாதாரண மணி நேரங்களுக்கான ஊதியம் பெறுவதற்கான உரிமை.
- வேலையில் இருந்து நிறுத்தப்படுவது அல்லது ஆட்குறைப்பு செய்யப்படுவது ஆகியவற்றைப் பற்றிய அறிவிப்பு உங்களுக்குத் தரப்பட வேண்டும்.

## நிரந்தர அல்லது குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வேலை

நிரந்தரத் தொழிலாளர்கள் அல்லது குறிப்பிட்ட காலப் பகுதிக்கான ஒப்பந்ததிலுள்ள தொழிலாளர்கள் என்ற வகையில் தொழிலாலர்களை வேலைக்கு அமர்த்தலாம்.

**நிரந்தர வேலை**

முதலாளி அல்லது தொழிலாளி வேலையை முடித்துக்கொள்ளும் வரை, தொடர்ந்து வேலை செய்யும் அடிப்படையில் நிரந்தரத் தொழிலாலர்கள் வேலையில் இருப்பார்கள்.

**குறிப்பிட்ட காலப் பகுதிக்கான வேலை**

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு அல்லது ஒரு குறிப்பிட்ட வேலைக்காக தொழிலாளி வேலைக்கு அமர்த்தப்படுகிறார் என்பதை இது குறிக்கும். உதாரணத்திற்கு, 6 மாத காலத்தில் வேலை முடிந்துவிடும் என்ற வகையிலான 6 மாத கால ஒப்பந்தம். நிரந்தரத் தொழிலாளர்களைப் போலவே அதே ஊதியம், மேலதிக ஊதியம் மற்றும் விடுப்புகள் ஆகியன குறிப்பிட்ட காலத் தொழிலாளர்களுக்கும் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் அல்லது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தத்தினால் மேலதிக நிபந்தனைகள் குறிப்பிட்ட கால தொழிலாளர்களுக்கு விதிக்கப்படலாம்.

## பகுதி நேர வேலை

**பகுதி நேரத் தொழிலாளர் ஒருவர்:**

- சராசரியாக, வாரத்திற்கு 38 மணி நேரத்திற்குக் குறைவாக வேலை செய்வார்
- ஒவ்வொரு வாரமும் ஒரே மாதிரியான நேரங்களில் வேலை செய்வார்
- முழு நேரத் தொழிலாளர் ஒருவரைப் போல, NES ஆதாயங்களுக்குத் தகுதி பெறுவார். ஒரு வாரத்திற்கு 38 மணி நேரம் வேலை செய்யும் முழு நேரத் தொழிலாளி ஒருவருடன் ஒப்பிடும்போது , ஒரு வாரத்திற்கு நீங்கள் எத்தனை மணித்தியாலம் வேலை செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்த விகிதாச்சாரத்தில் இது அமையும்.

## தொழில் பழகுநர்கள் மற்றும் பயிற்சி பெறுபவர்கள்

தொழில் பழகுநர் அல்லது பயிற்சிபெறுபவர் என்ற முறையில், வருடாந்த விடுப்பு, நோய்க்கால விடுப்பு, பொது விடுமுறைகள் மற்றும் இடைவேளைகள் போன்ற அனைத்திற்கும் மற்ற தொழிலாளர்களுக்கு உள்ள அதே உரிமங்கள் உங்களுக்கும் உண்டு. உங்களுடைய நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் அல்லது பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தம் ஆகியவற்றைப் பொறுத்தே உங்களது உரிமங்கள் அமையும், ஆகவே இதைப் பற்றிய தகவல்களைத் தரும் ஏடுகளைப் பற்றி உங்களுடைய முதலாளியிடம் கேளுங்கள்.